24th March 1958]

பரிசீலனையில் இருப்பதாகப் பதில் அளிக்கப்பட்டது. அதன் முடிவு என்ன ஆயிற்று? உடனடியாக அந்தத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இந்தக் கேள்வி தூத்துக்குடியைப் பற்றியது. கனம் அங்கத்தினர் வெகுதூரம் தள்ளி தஞ்சாவூருக்கு வந்துவிட்டார். இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும். நான் இதை அனுமதிக்க முடியாது.

SRI K. RAMACHANDRAN : தூத்துக்குடி துறைமுகத் திட்டம் சேது சமுத்திர திட்டத்தோடு இணைக்கப்பட்டே சிபார்சு செய்யப்பட்டது என்றும், சேதுசமுத்திர திட்டத்திற்கு நடைமுறையில் சில கஷ்டங்கள் ஏற்பட்டால் தூத்துக்குடி துறைமுக வேலையையாவது தனியாக நடத்திவிட வேண்டும் என்பதாக முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையா? உண்மையால் அதன்படி நடக்குமா?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அபிப்பிராயம் ஒரு வாறு உண்மையாக இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : ஐக்கியநாட்டு தொழில் நிபுணர்கள் குழு தூத்துக்குடிக்கு வந்தது தானாகவா? அல்லது அரசாங்கத்தின் அழைப் பின் பேரில் வந்ததா?

THE HON. SRI P. KAKKAN : இந்திய சர்க்கார் அழைப்பின் பேரில் தான் வந்தது.

SRI A. V. P. ASAITHAMBI : இந்தத் தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி பற்றி ராமசாமி முதலியார் சிபார்சு இருக்கிறது. அங்குள்ள வர்த்தக ஸ்தாபனத்தின் சிபார்சு இருக்கிறது. யு.கே. நிபுணர்களும் போய்ப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய சிபார்சுகளின் படி எந்தச் சிபார்சை சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார்கள்? இவ்விஷயத்தில் சர்க்காருடைய அபிப்பிராயம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தூத்துக்குடியை மத்தியதரத் துறைமுக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்து கொண்டிருக் கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே சேதுசமுத்திர திட்டத் தையும் இணைத்து தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது சர்க்காரின் நோக்கம். திட்டம் அந்த அடிப்படையில்தான் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற நிதி நிலைமை அடிப் படையை வைத்துக்கொண்டு பார்க்கும்போது சேதுசமுத்திரத்தை எடுத்துக் கொள்வது கஷ்டமாக இருந்தால் தூத்துக்குடி துறைமுகத்தை தனியாக எடுத்துக் கொண்டுவிடலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் இந்த இரண்டையும் இணைத்தே எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற முறையில் மத்திய அரசாங்கத்தினிடம் வற் புறுத்தித் தெரியப்படுத்தியிருக்கிறது.

Electricity for pumpsets.

***389 *Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to supply electricity for running pumpsets in wells owned by more than one person after taking an indemnity bond from them ?**

THE HON. SRI V. RAMIAH : No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஒரே கிணற்றில் இரண்டு பேருக்கும் பாகம் இருந்து வந்த இரண்டு பேரில் ஒருவருக்கு சர்வீஸ் கொடுத்துவிட்டு அவர் தண்ணீர் இறைக்கும்போது மற்றவருக்கும் அந்த வசதி கிடைப்பதற்கு இண்டெமினிடி பாண்டு எழுதி வாங்கிக் கொண்டு சர்வீஸ் கொடுக்கலாம் என்பதாக விதிகளிலும் இருக்கிறது. அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்யப் படுமா ?

[24th March 1958

THE HON. SRI V. RAMIAH : இந்தக் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்தது. இப்படிச் செய்வதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுவதைக்காட்டிலும் தீமையே ஏற்படும் என்கிற காரணத்தினால் பொதுவாக எந்தவிதமான அனுமதியும் கொடுக்கவில்லை.

Mid-day meals

*** 390 *Q*.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to grant any subsidies to schools from the Harijan Welfare Fund, to provide for free mid-day meals to Harijan pupils studying in high schools ?**

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI M. S. SELVARAJAN : நம்முடைய ராஜ்யத்தில் நடைமுறையில் இருக்கக்கூடிய இந்த நல்ல திட்டத்திற்கு ஆசி கூறும் வகையிலாவது ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலுமாவது இந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : நமது அரசாங்கமே இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை நடத்திக்கொண்டு வருகிறது. அங்கு ஹரிஜன மாணவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் கொடுத்துவருகிறோம். மத்தியான சாப்பாடு ஹரிஜன மாணவர்களுக்குக் கொடுக்கும் முறையில் $1\frac{1}{2}$ லட்சம். ஒதுக்கியிருக்கிறது. ஆனால் உயர்நிலைப்பள்ளியில் சாப்பாடு, புத்தகம் முதலியவைகளுக்கு ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படுகிறது.

SRI P. G. MANICKAM: பள்ளிக்கூட நிர்வாகிகள் ஹரிஜன மாணவர்களுக்கு பிற்பகல் உணவு கொடுப்பதற்கான திட்டத்தை வகுத்துக்கொண்டு அரசாங்கத்தின் உதவியைக் கேட்டால் அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அப்படி யாராவது முன்வந்தால் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கக்கூடிய எல்லா ஹரிஜன மாணவர்களுக்குமாவது ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப் படும் என்று சொல்லமுடியாது.

SRI M. S. SELVARAJAN : தனியார் உயர்நிலைப் பள்ளியில் பிற்பகல் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. அப்பேர்ப்பட்ட இடங்களிலாவது எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் வழங்க ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு சில விதிகள் இருக்கின்றன. மாணவனின் திறம், தகுதி, நிலை எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டே வழங்கப்படும்.

SRI K. B. S. MANI : கிராமாந்திரங்களில் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் ஹரிஜனப்பிள்ளைகளுக்குத் தனிச் சாப்பாடு கொடுக்க முடியுமா ? இப்படிக் கொடுக்க ஏற்பாடு செய்வதனால் சாதி மனப்பான்மை வளருவதற்கு வாய்ப்பு உண்டாகிறதா ? உண்டானால் ஹரிஜனங்கள் என்று தனியாகப் பிரித்துக் கொடுக்காமல் பிற்பட்ட இனத்து மாணவர்களையும் சேர்த்துக் கொடுக்க வசதி செய்யப்படுமா ?